REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 86630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: பங்குனி 30உ வியாழன் (12—4—56) ★ ★ வெளியூர்: சித்திரை 1உ வெள்ளி (13—4—56) [இதழ் 257

## எத்தனைபெரிய திட்டம்? எவ்வளவு கருணை?

இரண்டாம் திட்டத்தின்கீழ் டெல்லி சர்க்கார், சென்னை மாநிலத்திற்கு ஒதுக்கியுள்ள பல்வேறு (!) திட்டங்களுள் மிக முக்கியமானது என்ன தெரியுமா?

டெல்லி, கல்கத்தா நகரங்களில் துவங்கப்படவிருப்பது போன்றதொரு பெரிய (!) பால் பண்ணையை சென்னை நகரிலும் துவங்கப்போகிறார்களாம்.

பெருமிதத்தோடு அறிவிக்கிறார் டெல்லி விவசாய மந்திரி பஞ்சாப்ராவ் தேஷ்முக்.

பண்ணை நிபுணர்கள் மாநாட்டில் பேசியபோதுதான் அவர் இந்தத் தகவலைத் தந்திருக்கிறார்.

# 'தனி ஒரு கும்பலின் கோயிலானாலும் ஆலய நுழைவு சட்டத்திற்கு உட்பட்டதே'

## 'தினசரி சந்தர்ப்பணையின்போது மற்றவரைத் தடுக்கும் உரிமை தர்மகர்த்தர்களுக்கு உண்டு'

## 'ரதோற்சவம் நடைபெறும் 5 நாட்களிலும் தடை விதிப்பதற்கு உரிமை இருக்கிறது'

### கிழக்குக் காஷ்மீரிலிருந்து குடியேறிய மூல்கிப்பேட்டை பார்ப்பனக் குடிகளின் வல்லடி வழக்கு

### கவுட சரஸ்வதி பார்ப்பனர்கள் தென்னாடு புகுந்த கதை விளக்கம்

தென் கன்னடத்தில் உள்ள மூல்கி பேட்டையிலும், அதைச் சார்ந்துள்ள இரண்டு சிற்றூர்களிலும் கவுட சரஸ்வதி பார்ப்பனர் என்ற ஒரு சிறு பிரிவினர் இருந்துவருகின்றனர். அவர்களுடைய நிர்வாகத்தில் மூல்கிபேட்டையிலிருக்கும் வேங்கடரமணசாமி கோயில் இருந்துவருகிறது.

அந்தக் கோயில், சென்னை ஆலய நுழைவு சட்டத்திற்குட்பட்டதா, இல்லையா என்ற பிரச்சினை கிளம்பியது.

அரசாங்கம் ஆலய நுழைவு சட்டத்தை அமுல் நடத்த முனைந்தது. அதை எதிர்த்து தென் கன்னட மாவட்ட நீதிபதியிடம் கோயில் நிர்வாகிகளான கவுட சரஸ்வதி பார்ப்பனர்கள் வழக்குத் தொடுத்தனர்.

ஆலய நுழைவுச் சட்டம் அக்கோயிலையும் கட்டுப்படுத்தக் கூடியதே என, மாவட்ட நீதிபதி தீர்ப்பளித்தார்.

அத்தீர்ப்பை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில், கோயில் நிர்வாகிகள் வழக்கெடுத்தனர். வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதிகள் பி. கோவிந்தமேனன் அவர்களும், பி. என். இராமசாமி அவர்களும் கீழ் நீதிமன்றத் தீர்ப்பை ஆமோதித்து எதிர் வழக்கைத் தள்ளிவிட்டனர்.

*மூல்கிபேட்டை கோயில், தம் மரபைச் சேர்ந்த கவுட சரஸ்வதி பார்ப்பனர்களுக்கு மட்டுமே சொந்தமானது என்றும், அதில் இந்துக்களாக உள்ள மற்றவர்கள் உரிமை கொண்டாடுவதற்கு இடமில்லை என்றும், சென்னை அரசாங்கத்தின் 1947-ம் ஆண்டைய ஆலய நுழைவு சட்டம், இந்திய அரசியல் சட்ட அடிப்படை உரிமை 26-வது விதிப்படி செல்லக்கூடியதாகாது என்றும், கவுட பார்ப்பனர் சார்பில் வாதிடப்பட்டது.*

*அதுவுமன்றி, மூல்கிபேட்டையையும், அதைச் சார்ந்துள்ள இரண்டு ஊர்களில் மட்டுமே உள்ள கவுட பார்ப்பனர்களின் பரம்பரை சொத்து அக்கோயில் என்றும், அப்பார்ப்பனக்குடிகளை தென் கன்னடத்தில் உள்ள மற்றவர்கள் அன்னியர்களாகவே கருதி, உடனிருந்து உண்ணல், பெண் கொடுத்தல் வாங்கல் ஆகிய உறவு வைத்துக்கொள்வது கிடையாது என்றும், கவுட சரஸ்வதி பார்ப்பனர் சார்பில் கூறப்பட்டது.*

*அதை அரசாங்க சார்பில் மறுத்துரைக்கப்பட்டது. வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் கூறியதின் சாரமாவது :—*

தென் கன்னட மாவட்ட அரசாங்க ஏட்டில் குறிக்கப்பட்டிருப்பதுபோல், கிழக்கு காஷ்மீரிலிருந்து கிளம்பி பீகாரில் வந்து கவுட சரஸ்வதி பார்ப்பனர் தங்கினர். அதன் பிறகு திரட் எனும் இடத்திற்குச் சென்றனர். அதன் பின்னர், அவர்களில் சிலர், தென் கொங்கணத்தில் உள்ள கோவாவில் குடியேறினர். இப்போது தென்கன்னடத்தில் இருக்கும் கவுட சரஸ்வதி பார்ப்பனர்களின் முன்னோர்கள் போர்ச்சுகீசியர் கொடுமைக்கஞ்சி, தென்கன்னடப் பகுதிக்குக் குடியேறி தங்கி இருக்கவேண்டும். இப்பொழுதும்கூட கவுட பார்ப்பனர்களில் சிலர், கோவாவில் உள்ள கோயில்களை, தங்களுடைய குலதேவதைகளின் குடியிருப்பவைகளாகக் கருதி வருகின்றனர்.

அரசியல் சட்ட 26-வது விதி, தனி ஒரு கும்பலுக்குச் சொந்தமான கோயில் சொத்துக்களை நிர்வகிக்கும்பொறுப்பை மட்டுந்தான் குறிப்பிட்ட ஒரு கும்பலுக்கு உரிமையாக்குகிறதே அல்லாது, இந்துக்களாகக் கருதப்படும் மற்றவர்கள் அரசியல் சட்ட 25 (1)-வது விதிப்படி பெற்றுள்ள அடிப்படை உரிமைக்குத் தடை விதிக்கும் அதிகாரத்தை ஒரு கும்பலிடம் ஒப்படைப்பதாக இல்லை.

மதத் துறைக்குத் தொடர்புடைய சொந்த மத காரியங்களை நிர்வாகம் செய்வது என்ற பெயரில், தீண்டப்படாதோர் எனப்படுவோர் குறிப்பிட்ட கோயிலுக்குள் நுழைவதில் தடை விதிப்பதற்கு 26 (2) விதி இடமளிக்கவில்லை. அதுவுமல்லாமல், பொது அறநிலையங்களை இந்து பொதுமக்களுக்குத் திறந்து விடுவதுபற்றி சட்டமியற்ற உரிமை தரும் 25 (2) விதியின் தன்மையையும், தகுதியையும், 26 (2)-வது விதி கட்டுப்படுத்துவதாகவும் இல்லை.

ஆலய நுழைவுச் சட்டம் 2-வது பிரிவில், 'கோயில்' என்பதற்குத் தரப்பட்டுள்ள விளக்கம், தனி ஒரு கும்ப

(4-ம் பக்கம் பார்க்க)

## மாநில மாநாட்டுப் பணி தீவிரம்

### தொண்டர்கள், திடலை சுத்தம் செய்தனர்

**10-4-56** மாலை 3-மணிக்கு மாநில மாநாட்டு தொண்டர் படைத் தலைவர் ஐ. எம் ஷரீப் தலைமையின் கீழ் ஏராளமான தொண்டர்கள் திருச்சி நகரில் ஊர்வலமாகப் புறப்பட்டு, மாநாடு நடைபெற விருக்கின்ற 'ரேஸ் கோர்ஸ்' மைதானத்தை வந்தடைந்தனர்.

ஊர்வலத்தில், ஒவ்வொரு தொண்டரும் கழகக் கொடியும், மண்வெட்டியும் ஏந்திக் கொண்டு மாநாட்டுத் திடலை வந்தடைந்தனர்.

பிறகு மாநாடு நடைபெற வேண்டிய இடத்திலுள்ள செடி கொடிகளை செதுக்கிச் சுத்தம் செய்தனர்.

மாலை 6 மணிவரை சுத்தம் செய்தபின் கலைந்து சென்றனர்.

## தம்மம்பட்டி தோழர்கள் வழக்கு

### மீண்டும் ஒத்திவைப்பு

*பிப். 20—வேலை நிறுத்தத்தை யொட்டி தம்மம்பட்டித் தோழர்கள் மீது தொடரப்பட்டுள்ள வழக்கு சில வாய்தாக்களுக்குப் பிறகு மீண்டும் 11—4—56-ல் விசாரணைக்கு ஒத்திபோடப்பட்டிருந்தது.*

*11—4—56-ந் தேதி விசாரணைக்காகத் தோழர்கள் சார்பில் வாதாட வழக்கறிஞர் செட்டோ வந்திருந்தார்.*

*வழக்கு விசாரணையைக் காண்பதற்காக கழகத் தோழர்களும், பொதுமக்களும் நீதிமன்றத்திற்கு வந்திருந்தனர்.*

*வழக்கு மீண்டும் 18-4-56-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.*

## என். எஸ். இளங்கோ உள்ளிட்ட தோழர்களுக்குச் சிறைவாசம்

### அபராதம் கட்ட மறுத்து சிறை சென்றனர்

*பட்டுக்கோட்டை, ஏப். 11—பிப். 20-ந் தேதியன்று தேவிகுளம்—பீர்மேடு சம்மந்தமாக நடந்த அர்த்தாலில் கைது செய்யப்பட்ட கூட்டணித் தோழர்களுக்குப் பல தடவை தவணை போடப்பட்டு இறுதியாக, 11-4-56 அன்று தீர்ப்புக்கு பட்டுக்கோட்டை ஜுடிஷியல் மாஜிஸ்திரேட்டால் நாள் குறிப்பிடப்பட்டிருந்தது.*

*அன்று அனைவரும் கோர்ட்டில் ஆஜராகியிருந்தனர்.*

அவர்களுக்கு ரூ. 2 அபராதமும், கட்டத் தவறினால் இரண்டு நாட்கள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

அபராதம் கட்ட மறுத்து, அனைவரும் சிறை தண்டனை ஏற்றனர்.

அவர்கள் அனைவரும் பட்டுக்கோட்டை சிறையில் தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

*சிறைவாசம் மேற்கொண்ட தோழர்கள் :—*

*என். எஸ். இளங்கோ, அமிர்தலிங்கம், ஆர். முனுசாமி, சபாபதி, கே. எம். இஸ்மாயில் (தி. மு. க.), பி ரெத்தினம், சங்கர், சாம்பசிவம் (சம்பூ), வி. முருகேசன் (பி.சோ.), காடிமுத்து (சோஷ).*

## தாண்டானூர் தோழர்கள் வழக்கு

### விசாரணைக்குப் பின் மீண்டும் ஒத்திவைப்பு

*பிப் 20—பொது வேலைநிறுத்தத்தை யொட்டி தாண்டானூர் தோழர்கள் மீது தொடரப்பட்டுள்ள வழக்கு சில வாய்தாக்களுக்குப்பின் மீண்டும் 11-4-56ல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.*

*அரசாங்க வழக்கறிஞர், சம்மந்தப்பட்ட பஸ் டிரைவர், கண்டக்டர் இருவரையும் விசாரணை செய்தார்.*

*வழக்கில் சம்பந்தப்பட்ட தோழர்கள், எதிர் வழக்காடினர்.*

*வழக்கு விசாரணை மீண்டும் 20—4—56-ந் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாக மாஜிஸ்திரேட் அறிவித்தார். (க-ர)*

## 'போர்ட்டர்' வேலை செய்யும் தாய்மார்கள் !

### 653 பேர்கள் இந்திய இரயில்வேக்களில் உள்ளனராம்

"வடக்கு, தென்மேற்கு இரயில்வேக்களில் உள்ள பல இரயில் நிலயங்களில் 653 பெண்கள் வரை 'போர்ட்டர்'களாக வேலை செய்கிறார்கள்"

என்று உதவி இரயில்வே மந்திரி மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

வான்கானேர் என்ற இரயில் நிலயத்தில் மட்டும் சுமார் 50 பெண்கள் 'போர்ட்டர்'களாயிருக்கின்றனராம் !

## உணவும்—உரிமையும்

"இந்தியாவுக்கும்—ரஷ்யாவுக்கும் ஒரு வேறுபாடு உண்டு; ரஷ்ய மக்களுக்குப் போதிய உணவு கிடைக்கிறது—ஆனால், மனித உரிமை இல்லை; ஆனால், இந்தியாவில் உரிமை இருக்கிறது—போதிய உணவுதான் இல்லை"

என்று அமெரிக்கத் தொழிலாளர் சம்மேளன துணைத் தலைவர் வால்டர் ரூதர், பெங்களூரில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

நம் நாடு
தி. மு. க. வின் இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 12—4—54 திங்கள்

# வான்கோழி நடனம்!

கனம் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள், ஆட்சிப் பொறுப்பில் இருந்து விலகியே விட்டார். விலகினாரா, விலக்கப்பட்டாரா என்கிற ஆராய்ச்சிக்கு இப்பொழுது அவசியமில்லை. சென்னை மாகில ஆட்சிப் பொறுப்பில் அவருக்கு இருந்த பிடி கத்தரித்துப் போய்விட்டது என்பது வெளிப்படை.

அவர் ஆட்சியில் இருந்த காலத்தில்கூட, அவருடைய ஆணவப் போக்கைக் குறித்து நாம் அடிக்கடி எழுதினதுண்டு. அப்படி எழுதின ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், நாம் எரிச்சலோடும் சலிப்போடும்தான் எழுதி வந்தோம். அவருடைய செயல்களில் ஒன்று இரண்டு மட்டும்தான் தவறு உடையதாக இருந்தால், அந்த ஒன்று இரண்டை மட்டும் ஆராய்ந்து எழுதுவது என்பது ஆர்வம் தரக்கூடியதாக இருக்க முடியும். சூழ்ச்சியும், சதியும், ஜாதி வெறியும், அகந்தையுமே அவர் செய்த ஒவ்வொரு காரியத்திற்கும் அடிப்படையாக இருந்தால், அவைகளைப்பற்றி அடுத்தடுத்து விடாது எழுதுவது என்றால், எரிச்சலும் வெறுப்பும் எவருக்கும் ஏற்படுவது இயல்புதானே?

ஆட்சிப் பொறுப்பிலிருந்து ஆச்சாரியார் தொடர்பற்றுப் போன பின்னராவது, அவரைப்பற்றி எழுதாமல் இருக்கலாம் என்றாலோ, அதுவும் நம்மால் நூற்றுக்கு நூறு முடியக் கூடியதாக இல்லை.

திராவிட சமுதாயத்தின் எதிர்காலத்தையே மடமையில் மூழ்கடித்துவிட, அருமையான தொடக்கக் கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்து, பலாத்காரமாகப் புகுத்தி, கல்வி உலகில் ஒரு புதிய வரலாற்றுச் சம்பவத்தை நிலைநாட்டி வைத்த ஒரு பெரியாரை, எவரால், எப்படித்தான் மறந்துவிட முடியும்? கல்வித் திட்டம் நடைமுறையில் உள்ள வரையில், கல்வியைப் பற்றி எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும், அன்னார் ஆச்சாரியாரின் நினைப்பு ஒவ்வொருவருக்கும் வரத்தானே செய்யும்? எனவே, நமக்கும், அந்த வரலாற்றுப் புருஷரைப் பற்றிய நினைப்பு இப்பொழுதும் உண்டாவதில் ஆச்சரியமொன்றுமில்லை.

கல்வி கற்கும் வயது வந்த சிறுவர்களில் பெருந்தொகையினர் கல்வி பெறாமலேயே வளருகிறார்கள்; அவர்களுக்கு அதற்கான வாய்ப்பை உண்டாக்கித் தரவேண்டும்; அத்தகைய வாய்ப்பைப் பெறுகிற சிறுவர்களும் இளமையிலேயே தொழில் கல்வி பெறவும், தொழில் ஆர்வம் பெறவும் கல்வி முறையில் திருத்தம் செய்வது இன்றியமையாதது;—என்பன போன்ற உயர்ந்த எண்ணம் ஆச்சாரியார் அவர்களுக்கு இருந்திருக்குமானால், புதிய தொடக்கக் கல்வியை வலுக்கட்டாயமாகத் திணிப்பதற்கு முன்பாகவே, அத்திட்டத்தின் சாதக பாதகங்களை மற்ற கல்வி அறிஞர்களிடம் கலந்து ஆலோசித்து இருப்பார். ஏற்கனவே இருந்த கல்வி முறையில், அவர் கண்ட குறைபாடுகளை, மற்றவர்களுக்கும் விளங்கச் சொல்லி, அதற்கான தக்கப் பரிகாரத்தைக் கூறுமாறு அவர்களையும் வலியுறுத்தி இருப்பார். அதற்கு, அவர்கள் கூறும் சிறந்த யோசனைகளையும் ஏற்று, தமது திட்டத்தைத் திருத்தி, கூடுமான வரை பிழையற்றதாகச் செப்பனிட்டு, புதிய திட்டத்தை முறைப்படி நடைமுறைக்குக் கொண்டுவந்தும் இருப்பார். கல்வி முறையில் உண்மையிலேயே குறையிருக்கிறது என்று முடிவிற்கு வந்திருப்பவர்கள் அனைவரும், இந்த உயர்ந்த வழியைத்தான் பின்பற்ற முனைவர். இதுதான் போற்றுதலுக்கும் உரியதாகும். ஆனால், ஆச்சாரியாரோ, இச்சிறந்த வழியைப் பின்பற்றத் தவறிவிட்டார். தவறிவிட்டதுங்கூட, அறியாமையின் விளைவு அல்லவே அந்த! அறியாமையினால் நேர்ந்ததாக இருக்குமானால், திட்டத்தை மற்றவர் குறைத்துப் பேசிய உடனே, ஆச்சாரியார் நல்லவழி திரும்பி இருப்பார். இப்பொழுது ஆச்சாரியார், மாறுபட்ட கருத்துக்கு மதிப்பளிக்கத் தவறிவிட்டாரோ, அந்த ஒன்றிலிருந்தே, திட்டத்தைப் புகுத்தியதற்கு அவர் வெளிப்படையாகக் கூறிய காரணங்களுக்கும், தொடக்கக் கல்வித் திட்டத்திற்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்பது விளக்கமாகிவிட்டது. ஏதோ ஒன்றை உள்ளத்தில் மறைத்து வைத்துக்கொண்டு, அதற்கு நேர்மாற்றமான ஒன்றை, ஊர் மக்களை ஏய்க்க உளறிவழிகிறார் என்ற உண்மை பளிங்கு போல் அம்பலமாகிவிட்டது. இந்த உண்மையை, அவருடைய பிற்கால நடவடிக்கைகள் மெய்ப்பித்து விட்டன. நிற்க,

ஆந்திர மாநிலத்திலும், ஆச்சாரியாரின் புதிய தொடக்கக் கல்வித் திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. ஆந்திரமும், சென்னையும் ஒன்றாய் இணைந்திருந்த காலத்தில் ஏற்பட்ட வினை அது. ஆந்திரம் பிரிந்த உடனே, திட்டத்தை ஆராய்ந்து முடிவு கூற ஒரு குழுவை ஆந்திர சர்க்கார் நியமித்தது. ஆச்சாரியார், பொதுமக்கள் கண்ணில் மண்ணைத் தூவ, வேண்டா வெறுப்பாக நியமித்த பாருலேகர் குழுவின் முடிவை, ஆந்திர அரசாங்கம் ஒப்புக்கொள்ளாது ஒதுக்கி விட்டது. ஆச்சாரியார் சொன்னபடி ஆடிய பாருலேகர் குழுவின் முடிவில் ஆந்திர அரசாங்கம் துளியும் நம்பிக்கை வைக்கவில்லை; வைக்க விரும்பவில்லை. ஆச்சாரியாரின் நல்லெண்ணத்திலும், நேர்மையிலும் ஆந்திர அரசாங்கத்திற்குத் துளியும் நம்பிக்கைக் கிடையாது என்பதைத்தான், திட்டத்தை ஆராய புதிய குழு நியமனம் எடுத்துக் காட்டுகிறது.

புதிய திட்டம் பற்றி பாருலேகர் குழு கண்ட முடிவை குப்பைக் கூடையில் வீசி எறிந்துவிட்டு, ஒரு புதிய குழுவை நியமித்ததோடு மட்டுமல்லாமல், நாட்டு நல்லறிவாளர்களின் கருத்தை விரிவாக அறிய பொது 'வினாத் தாள்' ஒன்றையும் வெளியிட்டிருக்கிறது ஆந்திர அரசாங்கம். அந்த வினாத் தாளில் 24 வினாக்கள் உள்ளன.

"ஆந்திர மாநிலத்தில் தொடர்ந்து நடத்துவதற்கு புதிய திட்டம் சிறந்ததெனவும், பொருத்தமானதெனவும் நீர் கருதுகிறீரா?" என்பது வினாக்களில் எல்லாம் தலையாயதாகும்.

"உம்முடைய கருத்துக்குக் காரணம் கூறுக? திட்டம் திருத்தப்பட வேண்டியதற்குத் தகுந்தது என்றால், திருத்தப்படுவதற்கான வகைகளைக் கூறுக?" என்றும் வினவப்படுகிறது.

"பள்ளிச்செல்லும் பருவமடைந்தச் சிறுவர்களில் 50 சதவிகிதத்தினர் பள்ளிக்கு வாராததற்குக் காரணம் என்ன?" எனவும், "பள்ளியில் படிக்கவரும் மாணவச் சிறுவர்களில் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள் சராசரி சிறுவர்கள் படிப்பை நிறுத்தி வருகிறார்களே, அதற்கென்ன காரணம்?" எனவும், "நம்முடைய மக்கள் தொகையில் 85 சதவிகிதத்தினர் சிற்றூர்களில் இருந்தும்கூட, நகரப் புறங்களில் படிக்கும் சிறுவர்கள் தொகையைக் காட்டிலும் சிற்றூர் பகுதிகளில் படிக்கும் சிறுவர் தொகைக் குறைவாக இருக்கக் காரணம் என்ன?" எனவும், "பெற்றோர் ஈடுபடும் தொழில்களில் சிறுவர்கள் உதவி செய்வது, பிள்ளைகளின் கல்வி பெறுவதற்குக் குறுக்காக இருக்கிறதா?" எனவும், பொதுமக்களை ஆந்திர சர்க்கார் வினவி இருக்கிறது.

இத்தகைய வினாக்களுக்குக் கிடைக்கும் பதிலைக் கொண்டுதான், ஆரம்பக் கல்வித் திட்டத்தை மாற்றும் முயற்சியில் ஆந்திர அரசாங்கம் இனி தலையிட இருக்கிறது. இது தான் நியாயமான முறை. தற்கால கல்வி முறையில் காணப்படும் குறைபாடுகளைக் களைந்து, சிறந்ததொரு மாற்றத்தைச் செய்யவேண்டும் என்ற உண்மையான நல்லெண்ணம் இருப்பவர் அனைவரும், இம்முறையை வரவேற்று—வாழ்த்துவர் என்பதில் ஐயமில்லை.

ஆந்திர அரசாங்கத்தின் இப்போக்கையும், ஆச்சாரியாரின் ஆணவப் போக்கையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுகிறோம். ஆந்திரர் போக்கு வெண்ணெய்க்குச் சமம் என்றால், ஆச்சாரியாரின் போக்கு சுண்ணாம்பிற்குச் சமம் என்று தான் சொல்ல வேண்டியதாக இருக்கிறது.

ஆந்திர மாநிலத்தில் உள்ள நல்லறிவாளர்கள் அனைவரின் அறிவையும் நன்கு பயன்படுத்த முயற்சிக்கிறது ஆந்திர அரசாங்கம். ஆனால், ஆச்சாரியாரோ, தம் ஒருவரைத் தான் அறிவுள்ள பிராணியாக மதித்து நடந்து கொண்டாரே ஒழிய வேறு ஒன்றுமில்லை. ஆச்சாரியாரின் ஆணவ முனைப்பு தான் அவரை வான்கோழி நடனமாட வைத்தது. அந்தப் பொல்லாச் சிறகும் வெட்டப்பட்ட வான்கோழியாக இன்று ஆச்சாரியார் அதிகாரமிழந்து கிடக்கிறார்!

## குமரிகளை மணக்க — கிழவர்களுக்குத் தடை!

—(:)—

### புதிய மசோதா தயாராகிவிட்டது

புதுடில்லி, ஏப். 11—

குமரிகளை, கிழவர்கள் மணம் செய்து கொள்ளுவதைத் தடை செய்ய வேண்டுமென்று மக்கள் சபையில் பஞ்சாப் காங்கிரஸ் உறுப்பினரான திவான்சந்த் சர்மா ஒரு உத்தியோகப் பற்றற்ற மசோதா ஒன்று கொண்டு வந்திருக்கிறார்.

அந்த மசோதா கூறுவதாவது:—

"40 ஆண்டுக்கு மேற்பட்ட ஆண்கள் 25 வயதுக்குட்பட்ட பெண்களை மணம் செய்து கொண்டால் அந்த நபருக்கு 3 மாத வெறுங் காவல் தண்டனையோ அல்லது ரூ 1000 அபராதமோ அல்லது இரண்டும் சேர்த்தோ விதிக்கவேண்டும் என்றும், அம்மாதிரியான திருமணத்தை உடனிருந்து நடத்தினாலும் அல்லது நடத்த ஏற்பாடு செய்தாலும் அவர்களும் அந்தத் தண்டனைக்குரியவர்களாவார்கள்,' என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## வெட்டுக்கிளி — 'படையெடுப்பு!'

—:0:—

### இந்தியாவின் முஸ்தீபு!

புதுடில்லி, ஏப்ரல் 10—

இந்தியாவில் வெட்டுக் கிளிக் கூட்டங்களின் படையெடுப்பு ஏற்படுமென்று எதிர்பார்க்கப்படுவதால், இந்திய சர்க்கார் பாலைவனப் பிரதேசங்களில் வெட்டுக் கிளிப் படையெடுப்பைச் சமாளிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருப்பதுடன், தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருமாறு மாநில சர்க்கார்களுக்கும் ஆலோசனை கூறியுள்ளனர்.

## பர்மாவுக்குக் கப்பல் தபால்

சென்னை, ஏப். 10—

'எஸ். என். ஜலதுர்க்கா' என்ற கப்பல் 14-ந் தேதியன்று சென்னையிலிருந்து பர்மாவுக்குப் புறப்படுகிறது. நகரக் கிளைத் தபாலாபீசுகளில், 13-ந் தேதி காலை 10 மணிக்கு முன்பும், ஜி. பி. ஓ-வில் அன்று மாலை 3-மணிக்கு முன்பும் போடப்படும் தபால்கள் இந்தக் கப்பலில் சேரும்.

## சிங்கப்பூருக்குக் கப்பல் தபால்

சென்னை, ஏப். 10—

'எஸ். எஸ். ஜலகோபால்' என்ற கப்பல் 16-ந் தேதியன்று சென்னையிலிருந்து சிங்கப்பூருக்குப் புறப்படுகிறது. நகரக் கிளைத் தபாலாபீசுகளில் 15-ந் தேதி காலை 10 மணிக்கு முன்பும், ஜி. பி. ஓ-வில் அன்று மாலை 3-மணிக்கு முன்பும் போடப்படும் தபால்கள் இந்தக் கப்பலில் சேரும்.

## சேலம் தி. மு. கழக 2 வது மாநாடுகள்

### நகரசபை அனுமதி

8—4—54ல் நடைபெற்ற சேலம் நகரசபைக் கூட்டத்தில், சேலம் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தங்கள் இரண்டாவது மாநாடுகளை சேலம் விக்டோரியா மார்க்கட் மைதானத்தில் மே. 1, 2-ந் தேதிகளில் நடத்திக்கொள்ள அனுமதிக்கும் தீர்மானம் நிறைவேறியது.

## பம்பாய் தி. மு. கழக முதல் மாநாடு

### வரவேற்புக்குழு கூட்டம்

2—4—54 மாலை 7 மணியளவில் மாநாட்டு அலுவலகத்தில் (குடியரசு நிலையம்) தோழர் எஸ். தியாகராசன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, மாநாடு சம்பந்தமான கடிதங்களும் தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களின் கடிதங்களும் பரிசீலிக்கப்பட்டது. பின்னர், கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது:—

ஏப்ரல் 17, 18 ஆகிய நாட்களில் நடைபெறவிருந்த பம்பாய் தி. மு. கழக முதல் மாநாட்டை தி. மு. கழக பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களின் முடக்கலுக்கிணங்க தற்காலிகமாக ஒத்திவைக்கவும், அவர் குறிக்கும் தேதிகளில் மாநாட்டை நடத்தலாமெனவும் முடிவு செய்யப்பட்டது.

ஆத்தக்குடி, கல்லக்குடியில், உயிர்நீத்த தோழர்களின் குடும்ப நிதிக்கு "பரப்பிரம்மம்" என்ற நாடகத்தை 23—4—54ல், நடத்துவதெனவும், அதில் வசூலாகும் தொகையை தோழர் அண்ணாதுரை அவர்கள் பம்பாய் வருகையின்போது அளிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மாநாடு நடைபெறாத காரணத்தினால், 24, 25—4—54 சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் பம்பாய் தாராவியில் பொதுக் கூட்டங்கள் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

நாடகத்திற்குத் தலைமை தாங்கவும், பொதுக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றவும் தோழர் சி. பி. சிற்றரசு அவர்களை அழைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

## வேலையில்லாதோர் எண்ணிக்கை

புதுடில்லி, ஏப். 10—

நாட்டில் வேலையளிப்பு நிலைமையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் 'பிப்ரவரி மாதத்தில் காணப்படவில்லை. அந்த மாதத்தில் மொத்தம் 1,05,229 பேர் வேலையளிப்பு உதவி கோரி பதிவு செய்து கொண்டனர். இந்த எண்ணிக்கை சென்ற மாதத்திய எண்ணிக்கையைக் காட்டிலும் 11,040 குறைவாகும். சென்ற பத்து மாத காலத்தில், பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பது இம்மாதத்தில்தான்.

வேலை தேடி பதிவு செய்து கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை இம்மாத இறுதியில் 5,39,278 ஆக இருந்தது; இந்த எண்ணிக்கை ஜனவரி மாத இறுதியில் இருந்ததைக் காட்டிலும் 6,000 அதிகமாகும்.

—0—

## தேவை எவ்வளவு?

புதுடில்லி, ஏப். 7—

இந்தியாவிற்கு சகலவிதமான மோட்டார்களும் சேர்ந்து ஆண்டுக்கு 20,000 மோட்டார்கள், தேவைப்படுகின்றன என்று கணக்கிடப்பட்டுள்ளதாக மக்கள் சபையில் வர்த்தக மந்திரி தெரிவித்தார்.

# 'ஒரு மொழிதான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையே தவறு'

## 'இச்சிறு கண்டத்தை மொழியின் மூலமாக ஒரே நாடாக்கிவிட முடியுமா?'

### 'இலக்கியம் இலக்கணம் எழுத்து இல்லாத ஆரியம்மிகக்கலந்தது இந்தி'

### 'கட்டாய இந்தியை எதிர்த்து மாபெரும் கிளர்ச்சி தொடங்க வேண்டும்'

"இந்தியா முழுதும் ஒரே ஒரு மொழிதான் பொது ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்ற அடிப்படை எண்ணமே தவறானது என்று குறிப்பிட விரும்புகிறோம்.

"எந்த நாடும், பேரரசும் மொழியின் வலிமையால் ஒற்றுமையாக வளர்ந்ததாக வரலாற்றில் கிடையாது.

"கானடா, தென்னாப்பிரிக்கா, ஸ்பெயின், பெல்ஜியம், சுவிட்சர்லாந்து முதலிய நாடுகளில் மக்கள் வெவ்வேறு மொழிகள் பேசிக் கொண்டு ஒற்றுமையாக வாழ்கின்றார்கள்.

"நூற்றுக்கணக்கான மொழிகளைப் பேசும் பல்வேறு இனமும், வகுப்புமுள்ள நாற்பது கோடி மக்களைக் கொண்ட இச்சிறு கண்டத்தை மொழியின் மூலமாக ஒரே நாடாக்கிவிட முடியுமா? அதுவும், பல்வேறு மாகாணங்களில் போதுமக்கள் எதிர்த்துவரும் கட்டாய இந்தி மொழி எங்ஙனம் பொது ஆட்சிமொழியாக இயங்க முடியும்?

"ஆரியம் மிகக் கலந்த இந்தியை முகம்மதியர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. உயர்ந்த இலக்கியமும், பூரண இலக்கணமும், சொந்த எழுத்தும் இல்லாத இம்மொழி, கட்டாய முறையில் கல்வி நிலையங்களில் புகுத்தப்படுவதைத் தமிழ் மக்கள் அறவே வெறுக்கிறார்கள்.

"தமிழர்கள் ஒன்று சேர்ந்து, தம்முடைய மொழியின் வளர்ச்சிக்கு இடையூறான கட்டாய இந்தியை எதிர்த்து மாபெரும் கிளர்ச்சி தொடங்க வேண்டும். அக்கிளர்ச்சியில், கட்டாய இந்திக் கொள்கையைக் குறித்து பொதுத் தேர்தல் நடத்தி, பொது மக்களுடைய கருத்தைத் தெரிந்த பிறகுதான் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டும் என்று வற்புறுத்த வேண்டும்.

**"தமிழர்கள் இனி வாளாவிருத்தல் கூடாது. மொழியையும், கலையையும், பண்பையும் விழிப்புடனும், வீர உணர்ச்சியுடனும் காக்க வேண்டிய காலம் வந்திருக்கிறது."**

என, 9-4-54-ந் தேதிய அண்ணத் தலையங்கத்தில், 'தமிழ் நாடு' எழுதுகிறது. மேலும் அது கூறுவதாவது:—

"மொழிச் சிக்கலைக் குறித்து, காங்கிரசுச் செயற்குழு செய்துள்ள முடிவு, எப்படியாவது இந்தியைக் கட்டாய பாடமாக மக்கள்மேல் சுமத்தி, பதினைந்தாண்டு காலத்துக்குள் அதை நாட்டின் ஒரே பொதுமொழியாக நிலை நிறுத்திவிட வேண்டும் என்ற அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

"இக்கட்டாய முறையினால் தம் கொண்ட இலட்சியத்தை அடைவது அவ்வளவு எளிதான காரியமேயல்ல என்று காங்கிரசுத் தலைவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்; இதைச் செயற்குழுத் தீர்மானச் சொல்லமைப்பு விளக்கிக் காட்டியிருக்கிறது.

"இச்சொல்லமைப்பு. ஆங்கில மொழியின் முதன்மையான தன்மையையும், தாய் மொழிகளின் இன்றியமையாத மேன்மையையும், இந்தியின் சட்ட பூர்வமான தலைமையையும் குறிப்பிட்டு, இவைகளுக்கிடையில் காங்கிரசுக் கட்சிக் கொள்கையாகிய கட்டாய இந்தியை வற்புறுத்த முயற்சி செய்கிறது.

"கட்டாய இந்தியைக் குறித்து, காங்கிரசுச் செயற்குழு செய்துள்ள முடிவை மெய்யான தாய் மொழிப் பற்றுள்ள யாரும் ஆதரிக்கமாட்டார்கள்.

"தொடக்கக் கல்விக்கு அடுத்ததான இரண்டாவது படி ('செகண்டரி') பயிற்சிக்கு இந்தியைக் கட்டாய இரண்டாவது மொழியாக அமைத்தாக வேண்டும் என்ற காங்கிரசுச் செயற் குழுத் தீர்மானம் தாய் மொழி வளர்ச்சிக்கு எப்படி ஊறு செய்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும்.

"கற்றதனாலாய பயன் அரசாங்கப் பணி செய்து கிடப்பதே!—என்ற சூழ்நிலையில் நாடு இருக்கும்போது, அரசாங்க மொழியாக இந்திக்கு வேண்டிய சலுகைகள் கொடுத்து, அதைக் கட்டாயமாகக் கல்வி நிலையங்களினுள் புகுத்தினால், தாய் மொழியில் பற்றுள்ளவர்களும் இக்கட்டாய முறையால் அப்பற்றை இழந்து, தாய் மொழியின் வளர்ச்சி குன்றும்படியான நிலைமை ஏற்படுகிறது. இதனால்தான், இக்கட்டாய இந்தி முறையை நாம் வன்மையாகக் கண்டித்து வந்துள்ளோம்."

### தமிழன் பகுத்தறிவு நிலையம்

திருச்சி, ஏப் 10—

தமிழன் பகுத்தறிவு நிலையத்திற்குக் கீழ்க்கண்டவர்கள் நிர்வாகக் குழுவினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: தலைவர்: இ. கருணாகரன்; செயலாளர்: அ. சம்பத்; துணைச்செயலாளர்: த. பிச்சை; பொருளாளர்: ஆ. .....சாதன்.

### மு. கருணாநிதி சுற்றுப்பயணம்

★

ஏப் 12 : பண்ணைபுரம் (மதுரை மாவட்டம்)
15 : சேத்துப்பட்டு-சென்னை
18 : ஈரோடு
20 : மேட்டுப்பாளையம்.

### தாளமுத்து — நடராசன் நினைவுப் படிப்பகம்

பரவை, ஏப். 10—

4—4—54 மாலை 6-30-க்கு படிப்பகத்தின் முதலாவது ஆண்டு விழா பரவை கிராமத்தில், தோழர் சந்திரகாந்தன் தலைமையில் நடைபெற்றது. தோழர் நீளமுருகு, தோழியர் பொற்செல்வி சொற்பொழிவாற்றினர். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### பாண்டியன் படிப்பகம்

காரைக்குடி, ஏப்ரல் 10—

இந்நகர் பாண்டியன் படிப்பகத்தின் செயற்குழு அவசரக் கூட்டம் 4—4—54 இரவு 9 மணிக்கு தோழர் முத்துக் கருமாட்சிபாண்டியன் தலைமையில் நடைபெற்றது. வருகிற 22—5—54ல் படிப்பக ஆண்டு விழாவை நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

### "சிந்தனை" படிப்பகம்

வேதாரணியம், ஏப். 8—

6—4—54ல், படிப்பகத்தின் பொதுக்குழுக் கூட்டம் செயலாளர் என் ஜி ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, படிப்பகத்தின் கட்டிட திறப்பு விழாவும், பொதுக் கூட்டமும் மே மாதம் முதல் வாரத்தில் நடத்தவேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

### எண்ணூர் தி. மா. மு. கழக செயற்குழு கூட்டம்

3-4-54-ல், தோழர் வி. சேது தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், கழகக் கொட்டகை கட்டப்பட்டு, அதன் திறப்புவிழா நடத்துவது பற்றி யோசிக்கப்பட்டது.

மற்றும், புதிதாக கொடி ஏற்றுவதெனவும், திறப்பு விழா அன்று பொதுச் செயலாளர் அண்ணாதுரை படம் திறப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

### நான்குனேரி வட்டார ஆதிதிராவிட சங்கம்

பம்பாய், ஏப். 10—

4—4—54-ல் காலை 10-30 மணிக்கு தோழர் என். மாசானம் தலைமையில் நிர்வாகக் குழுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் என். எஸ். மாடசாமி, என். எம். செல்லையா, எம். எம். துரைப்பாண்டியன், வி எம். கணபதி ஆகியோர் சங்க வளர்ச்சியைப் பற்றி பேசினர்.

—o—

### திருமணம்

திருக்கோட்டியூர் காலஞ்சென்ற ஞானசண்முகம் அவர்கள் புதல்வி கல்யாணிக்கும், நாட்டரசன் கோட்டை சுப்பையா பிள்ளை குமாரர் சோமசுந்தரத்திற்கும் நாட்டரசன்கோட்டையில் ஏப்ரல் 7-ம் தேதி திருமணம் சிறப்புற நடந்தேறியது.

## கழகச் செய்திகள்

### இராமநாதபுரம்(முகவை) தி. மு. கழகம்

4—4—54 மாலை 7 மணிக்கு சந்தைப்பேட்டைத் திடலில், தி. மு. கழகச் சார்பில் தோழர் சா. பாசு தலைமையில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம், தோழர் சிற்றனி—சுப்பிரமணியம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் போராட்டங்களைப் பற்றி விளக்கியும், அடக்குமுறைகளைக் கண்டித்தும், திராவிட நாடு பிரியவேண்டிய அவசியத்தை வலியுறுத்தியும் விரிவுரையாற்றினர்.

### எருமப்பட்டி தி. மு. க.

6—4—54ல் சாமிதாஸ் இல்லத்தில், தோழர் இராமசாமி தலைமையில் கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, சேலம் மாவட்ட பிரதிநிதிகளாக தோழர்கள் சி இராமதாசன், சாமிதாஸ் ஆகியவர்களையும், தொண்டர்களாகத் தோழர்கள் இந்திரஜித், வேணுகோபாலன் ஆகியவர்களை அனுப்புவதென்றும், திருச்சி சங்கரனார் மறைவிற்கு அனுதாபம் தெரிவித்தும், மஜீத் படிப்பகம் அமைக்குவதென்றும், முடிவு செய்யப்பட்டது.

• • •

தி. மு. கழகச் சார்பில் சங்கரனார் சொற்பயிற்சி மன்றம் தோழர் சாமிதாஸ் தலைமையில் துவக்கப்பட்டு, தோழர்கள் இந்திரஜித், சி. இராமதாசன் இன்மாயில் ஆகியோர் பேசினர்.

### பரமக்குடி தி. மு. கழகம்

30—3—54-ல், கழகக் கட்டிடத்தில் தோழர் என். சரளாமணாளன் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. தோழர்கள் வி. வி. தனுஷ்கோடி, அருப்புக்கோட்டை முத்து மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

### புளியந்தோப்பு தி. மு. க.

சென்னை, ஏப். 8—

28—3—54 பிற்பகல் 1-30 மணிக்கு 18-வது வட்ட தி. மு. கழக மனையில் தோழர் கே. சுப்பிரமணி தலைமையில், செயற் குழுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது 28-2-54ல் நடந்த சிறப்புக் கூட்டத்தினுடையவும், கழக, சென்ற 3 மாதங்களின் வரவு செலவையும் பரிசீலித்து ஒப்புக்கொள்ளப்பட்டது.

### நாகூர் தி. மு. கழகம்

5—4—54 இரவு 9 மணிக்கு, கழகச் செயற்குழு, தோழர் எஸ். வி. சபாபதி தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் எம். என். ராய், என். ஆர். சாமியப்பா, வி. வி. தனுஷ்கோடி ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், பொதுக்குழு தீர்மானங்களை ஆதரித்தும், சென்ற பொதுக் கூட்ட வரவு-செலவினங்களை அங்கீகரித்தும், பிரெஞ்சிந்திய இணைப்புப் போராட்டத்தை ஆதரித்தும், மே. முதல் வாரத்தில் பொதுக்கூட்டம் நடத்துவதென வும் தீர்மானிக்கப்பட்டது.

### வடக்கூர் தி. மு. கழகம்

அத்தக்குடி, ஏப் 10—

4—4—54-ல், செயலாளர் பி சண்முகம் தலைமையில் அங்கத்தினர்கள் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம், கழக 14-வது ஆண்டு விழாவை மே 9-5-54ல், நடத்த முடிவு செய்யப்பட்டது.

### கீழப்பூங்குடியில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

27—3—54ல், தோழர் மு. சேகர் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் என். எஸ் இளங்கோ, இரா. மு செங்குட்டுவன், இராம. சுப்பிரமணியம், பெரி கணேசன், வான்மதி, மணவாளன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

### பரமக்குடியில் தி. மு. கழக பொதுக் கூட்டம்

5—4—'54-ல், பரமக்குடி குமரன் படித்துறையில் தோழர் தண்டபாணி தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுபோது தோழர்கள் சரளாமணாளன், இரா. அ. பரமசிவம், நாகலிங்கம் ஆகியோர் பேசிய பின், தோழர் சேலம் சித்தனி ச. சுப்பிரமணியம் அவர்கள், திராவிட நாட்டுப் பிரிவினையைப் பற்றி பேசினார். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

### அய்யம்பேட்டையில் தி மு.க. பொதுக்கூட்டம்

6—4—54ல், இவ்வூர் சினிமா கொட்டகை முன்பு தி. மு. கழகச் சார்பில், தோழர் எஸ். ஆறுமுகம் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் நெடுஞ்செழியன் "திராவிட நாடு ஏன் பிரிய வேண்டும்" என்பதையும், இன்றைய அரசியலை குறித்தும், சொற்பொழிவாற்றினார்.

### கடலூர் ஓ. டி. தி. மு. கழக செயற்குழு தேர்தல்

4—4—54 மாலை 3 மணிக்கு செயற்குழு தேர்தல் கூட்டம், கழகக் கட்டிடத்தில், தோழர் ச. அரசிளங்கோ தலைமையில் நடைபெற்றபோது, செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: கி. கோவிந்தராசன்; துணைச் செயலாளர்: எஸ். அஜீஸ்; பொருளாளர்: கி. சேரன்; மாவட்டப் பிரதிநிதி: ச. அரசிளங்கோ; உறுப்பினர்கள்: அ. கந்தசாமி, அ. பரந்தாமன், கு. தாமோதரன், ச. வாகை வளவன் ஆர். நடராசன், கி. நாராயணசாமி, கி. துரைராஜ். தோழர்கள் வி. வி. தனுஷ்கோடி, என். ஆர். சாமியப்பா, அருப்புக்கோட்டை முத்து இவர்கள் மறைவு குறித்து அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப் பட்டதுடன், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

### மேலக்கற்கண்டார் கோட்டை (பொன்மலை) தி. மு. கழகம்

4-4-54 காலை 10-30 மணிக்கு கழகக் கட்டிடத்தில் கழக உறுப்பினர் கூட்டம் தோழர் எ. சம்சுதீன் தலைமையில் நடைபெற்றபோது, 25—3—54ல் நடைபெற்ற நிர்வாகக் குழு கூட்டத் தீர்மானங்களை ஆதரித்தும், மே மாதம் இரண்டாவது வாரத்தில் பொதுக்கூட்டம் நடத்துவதெனவும், கழக கட்டிடம் வாங்குவதற்கு பொதுமக்கள், கழகத் தோழர்கள், ஆதரவாளர் ஆகியோரிடம் பொருள் திரட்டுவதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன், கட்டிட நிதிக்கு பொருளீட்ட தோழர்கள் எல் கிருஷ்ணமூர்த்தி, விஜயராகவன், ஜி. வி. கோபால், ஆர். கைலாசம், எ. சம்சுதீன், பரமானந்தராஜ், எ. சுந்தரம், டி. ஆர். கோவிந்தராசன், எம். மாணிக்கம், என். காளிமுத்து ஆகியோர் கொண்ட குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

# அண்ணு சொற்பொழிவு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பட்ட சீர்திருத்த செம்மல்கள் தந்த சீரிய கருத்துக்களையும் எதாவது ஒரே குறிப்பிட்ட புத்தகத்திலே காண முடியுமா என்ருல் முடியாது என்றுதான் சொல்லவேண்டும். ஆனுல், சிலமணி நேரங்களிலே உங்களுக்கு நண்பர்கள் இந்தச் சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்டி, இங்கு நிலவுகிற சீர்கேடுகளை கல்லி எறிய உலக சீர்திருத்தவாதிகள் தந்த கருத்துக்கள் எப்படி நமக்குப் பயன்படுத்த முடியும் என்பதைச் சிறந்த முறையில் எடுத்துக் கூறினர்கள். ஆகவேதான், இம்மாதிரி சமூக சீர்திருத்த மாநாடுகளை நாம் வெகுவாக நடத்தி வருகிறோம். நண்பர் பொன்னம்பலனர் அவர்கள் சூசகமாக 'மாநாடு நடத்துகிறவர்களுக்கு மட்டும் இல்லை பொறுப்பு—மாநாட்டுக்கு வந்திருக்கும் உங்களுக்கும் பங்குண்டு' என்று குறிப்பிட்டார். காலை முதல் மாலை வரை ஒளி, ஒலி ஏற்பாடுகளில் குறை ஏற்பட்டபோதெல்லாம் நீங்கள் காட்டிய பொறுமையை நான் பாராட்டுகின்றேன். அத்தகைய நெருக்கடியான நேரங்களில் எல்லாம் நீங்கள்தான் வந்திருக்கும் தாய்மார்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் போலீசாராக, போர்வீரர்களாக இருக்க வேண்டும். அப்படி இருக்க வேண்டுமென்ருல் அவர்களைச் சுற்றி எழுந்து நின்று பாதுகாக்க வேண்டும் என்பதல்ல. அவரவர்கள் அவரவர்களுடைய இடத்திலே அமைதியாக அமர்ந்திருந்தாலே போதுமானது.

இங்கே கமால்பாட்சாவைப் பற்றிப் பேசிய நண்பர் இளங்கோ அருக்கிய நாட்டுச் சமுதாயத்தில் நிலவிய மூட எண்ணங்களையும், அந்த எண்ணங்களை மாற்றி புதுமைக்க இஸ்மத் கமால் பட்ட பாட்டினையும் எடுத்துக்காட்டினர். கமால் தோன்றுவதற்கு முன்னுல் துருக்கி, 'ஐரோப்பாவின் நோயாளி' என்றழைக்கப்படும் அளவிற்கு—சீர்கேடுகளின் இருப்பிடமாயிருந்தது. "அஞ்சி அஞ்சி சாவார், இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே" என்பதற்கிலக்கா யிருந்தனர்—அந்த நாட்டு மக்கள்.

பளபளப்பான பட்டாக் கத்தியோ, பரிவாரங்களோ, துருக்கிய மக்களின் எண்ண அடிப்படையை மாற்றவில்லை. ஆனுல், இஸ்மத் கமாலின் இடையருத உழைப்பும், தன்னம்பிக்கையும், அந்த நாட்டு மக்களின் வாழ்விலே மறுமலர்ச்சியையும், அவர்கள் எண்ணங்களிலே புதுமை இடம் பெறவுமான நிலைகளை, உருவாக்கின.

கிரேக்க நாடு, ஆழ்ந்த கடலைக் கிழித்தோடும் அழகிய கப்பல்களையும், அருங்கலைகளையும், பெருங் காவியங்களையும் பெற்றிருந்தாலும், நாட்டை காக்கப் போரிடும் வீரமிக்க போர்வீரர்களையுந்தான் பெற்றிருந்தது; என்ருலும், அங்கே, ஆண்டான் அடிமை என்னும் பேதங்களும், மக்களை மடமைக் குழியில் ஆழ்த்தும் மத நம்பிக்கைகளும், அவைகளின் மீது எழுப்பப்பட்ட ஆபாசச் சடங்குகளும், ஆண்டவன் திருவிளையாடல்களும் இருக்கத்தான் செய்தன.

இந்த தீய எண்ணங்கள், மூடப் பழக்க வழக்கங்கள், மக்கள் உள்ளத்திலிருந்து கல்லி எறியப் பட்டாலின்றி நாடு ஈடேருது என்றுணர்ந்த சாக்ரடீஸ், மக்களின் எண்ண அடிப்படையை மாற்ற ஆரம்பித்தான்; தன் புதுமை கருத்துக்களைச் சொல்லத் துவங்கினன்.

இத்தகு, சீர்திருத்தவாதிகளின் புத்தம் புதுக் கருத்துக்களை—நம் நாட்டு மக்களின் சமுதாயச் சீர்கேடுகளைப் போக்க, நாம் நாட்டவர்க்கு எடுத்துச் சொல்லியாக வேண்டும்.

தஞ்சை மாவட்டத்து மக்களைக் கேட்டுத்தான் பாருங்களேன், 'ஆப்ரகாம் லிங்கனைத் தெரியுமா? ப்ளாரன்ஸ் நைட்டிங்கேலைத் தெரியுமா?' என்று தெரியாதென்றுதான் உரைப்பர். 'பட்டினத்தாரைத் தெரியுமா? தாயுமானவரைத் தெரியுமா?' என்று கேளுங்கள்—கேட்குமுன் அவர்கள் இயற்றிய கவிதைகளை ஒப்பிப்பர்.

நான், பட்டினத்தாரையும், தாயுமானவரையும் தெரிந்து கொள்ள வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனுல், அவர்களை மட்டும் தெரிந்து கொண்டால் போதாது—உலக விஷயங்களை அனைத்தும் தெரிந்து கொள்ள வேண்டும். என்னும் ஆவல் இந்த நாட்டு இளைஞர்க்கெல்லாம் ஏற்பட்டாக வேண்டும்.

உலக சமூக சீர்திருத்தவாதிகள் எல்லாம், பட்ட கஷ்டங்களை நாம் சொல்லும்போது, 'பட்டத்தரசளுக வேண்டியவன், இஷ்ட பத்தினியுடன் பதினுன்கு ஆண்டு கானகமேகினன். ராமன் பட்ட கஷ்டத்தைவிடவா?' என்று முதியவர் சந்தேகப்படுவர்.

அவதரித்தவர்கள் பட்ட கஷ்டங்களுக்கும், அவனியில் வாழும், மனிதர் தம் வளைந்த வாழ்வை நிமிர்க்கப் பாடுபடுபவரின் கஷ்டங்களுக்கும் உள்ள அடிப்படை வேறுபாட்டை எடுத்துக் காட்ட வேண்டும்.

அவதரித்தவர்களுக்கும், பக்தர்களுக்கும் ஆண்டவன் துணையாயிருந்தான். நாவுக்கரசரை கல்லில் கட்டி கடலில் பாய்ச்சியபோது கல், தெப்பமாக கடவுளால் மாற்றப்பட்டு, நாவுக்கரசர் காப்பாற்றப்பட்டார் என்று புராணம் சொல்கிறது.

அவர்களுக்கெல்லாம், விஷம் அமிர்தமாக மாறும் பாம்பு மலர் மாலையாகும் கல் தெப்பமாகும் ஆனுல், சாக்ரடீசுக்குத் தரப்பட்ட நஞ்சு, அவரைக் கொல்லும் தன்மையது என்று நன்ருக அறிந்தே, அதை அருந்தி, உயிர் துறந்தார்.

குழந்தை உறங்கும்போது, புலியொன்று வீட்டினுள் நுழைந்து குழந்தையருகில் சென்ருல் தந்தை என்ன, அந்த நேரத்தில் அஞ்சவா செய்வான்? குழந்தை காப்பாற்றப்பட வேண்டும் என்ற எண்ணத்தில், புலியின் கூறிய நகங்களையும், கோரப் பற்களையும் அவன் சாதாரண மனிதனுனுலும் எதிர்க்கத் துணிவான். அதைப்போலவே, சீர்திருத்தவாதிகள் கொடுமைகள் பலவற்றிற்கும் ஆளாயினும் நாடு நலம்பெற உழைக்கத்தான் துணிவர். நாம் சார்ந்துள்ள பரம்பரை சாக்ரடீஸ், ஆப்ரகாம் லிங்கன் பரம்பரை;

கோடிக்கணக்கான செல்வமுடையவர்களையும், கோபுரங்களையும் உடைய ஆண்டவனையும் எதிர்க்கிறோம். ஆச்சரியப்படுகின்றனர் பலர்—இவர்களால் எப்படி முடிகிறது எதிர்க்க? என்று.

மலையைப் பிளக்க சிற்றுளி போதவில்லையா? என்ன? அதைப் போன்றே மலையென வளர்ந்துள்ள மதச் சம்பிரதாயங்களையும், மடமை எண்ணங்களையும் அவைகளை முதலாக வைத்தே வாடாது வாழும் மடாதிபதிகளையும், அவர்கள் கற்பித்திருக்கிற கடவுளர்களையும், சாதாரணவர்களான நாம்எதிர்க்கிறோம்.

"வெற்றி பெற முடியுமா?"—கேட்கிருர்கள் இப்படிச் சிலர். வெற்றி பெற்றே இருக்கிறோம். இதுவரை நாம் பார்க்கிறோமே? இப்போது எத்துணை மடாதிபதிகள், கல்லூரி நிறுவுவதிலும், மருந்துவ நிலையங்கள் அமைப்பதிலும் தங்கள் கருத்தையும் காசையும் செலவு செய்வதை இன்னும் சில நாள் போனுல்? நானிருக்கும் இடம் எனக்குப் போதும்—எஞ்சியதை எடுத்துக் கொள்ளுங்கள் என்றுதானே அவர்கள் சொல்லியாகவேண்டும்!

நாம் மட்டும் கடவுளை எதிர்ப்பதாக சிலர் சாடு கிறக்கிருர்கள்.

10 ஆண்டுகட்கு முன்னர் பண்டித நேரு ஒரு வழக்கிலே சாட்சியம் சொல்லும்போது, 'கடவுள் சட்சியாகச் சொல்லுகிறேன்' என்று சொல்லுமாறு கேட்ட நீதிபதியிடம், தனக்கு கடவுள் நம்பிக்கை இல்லை. எனவே, அப்படிச் சொல்ல மாட்டேன்' என்று கூறினரே நேரு. அவரைக் கேட்டார்களா காங்கிரஸ் நண்பர்கள்—ஏன் அப்படிச் சொன்னீர்கள் என்று. நம்மை மட்டும் கேட்கிருர்களே இப்போது; மேலும் இரண்டொரு மாதத்திற்கு முன் பண்டித நேரு சொன்னர் — நாட்டிலே வேண்டுமானுல் இரண்டொரு மகான்கள் இருக்கலாம்; மற்றவர்கள் எல்லாம் துறவிகள் என்ற பெயரிலே மக்களை ஏமாற்றி வாழும் சோம்பேறிகள் — இவர்கள் 10 லட்சம் பேர் வரை இப்படி இருக்கிருர்கள்' என்று. ஏன் அவரை எல்லாம், திருவாவடுதுறைஆதீனங்கள் எதிர்த்துச் சொல்லவில்லை.

அதற்கும் காரணம் இருக்கிறது. நேரு போகிற போக்கிலே இப்படி எல்லாம் பேசுவார் அவ்வளவுதான். நாம் அப்படிக்கல்ல, நின்ற இடத்திலே, இருந்து கொண்டு, அந்தச் சோம்பேறிகள் ஒழிக்கப்பட வேண்டுமென்பதற்காகவே, வேலை செய்பவர்கள். நேரு, நடந்து கொண்டே வியாபாரம் செய்பவர். நாம் கடைக்குப் பெயர் கொடுத்து உட்கார்ந்து கொண்டு வியாபாரம் செய்பவர்கள். தெருவிலே வரும் வியாபாரியிடம் அதிக நாணயமிருக்க முடியாது. ஏனென்ருல், பொருளைத் தந்துவிட்ட பிறகு அவனைப் பார்க்க முடியாது. ஆனுல், நம்மிடம் வாங்கிய பொருள் நல்லது அல்ல என்று வாங்கியவன் தெரிந்தால், நம்மிடம் வந்து அவன் கேட்கிற வசதியை வாய்ப்பை, நாம் அவனுக்குத் தந்துள்ளோம். ஆகவே, நம்மிடம் நாணயம்நிறைய இருக்கிறது.

எனவே, நாம் இந்த நல்ல சீர்திருத்த வேலைகளை இடையருது செய்தாக வேண்டும். புதாத உள்ளங்களில் எல்லாம், புத்தம் புதுக் கருத்துக்கள் நித்தம் நித்தம் புகுத்தப்பட வேண்டும். இதற்கு நிறைந்த பொறுமை உணர்வும், தன்னடக்கமும் தேவை. அந்த தன்னடக்கம் தான், மாற்ருரை நம் பக்கம் இழுக்கும் காந்தம். அத்தகு உள்ளப்பண்போடு இடைவிடாது பணி புரியுங்கள்."

# சென்னை புதிய மந்திரி சபை

சென்னை, ஏப்ரல் 12—

திரு. காமராஜ் நேற்று மாலை 4 மணிக்கு ராஜபவனத்தில் கவர்னரைச் சந்தித்து தமது மந்திரி சபை பட்டியலை கொடுத்தார்.

கீழ்க் கண்டவர்கள் அந்தப் பட்டியலில் இடம் பெற்றிருக்கிருர்கள்:—

- கே. காமராசர்
- ஏ. பி. ஷெட்டி
- எம். பக்தவத்சலம்
- பி பரமேஸ்வரன்
- சி. சுப்ரமணியம்

நேற்று இரவு காமராசர் டில்லிக்கு விமானம் மூலம் புறப்பட்டுச் சென்ருர்.

காங்கிரஸ் மேலிடத்தைக் கலந்துகொண்டு அநேகமாக இன்றே, டில்லியிலிருந்து எல்லா மந்திரிகளின் பெயர்களையும் வெளியிட அவர் ஏற்பாடு செய்வாரெனத் தெரிகிறது.

காமன்வீல் கட்சியும், தமிழ்நாடு உழைப்பாளர் கட்சியும காங்கிரசில் சேர்ந்துவிடுமென்றும், அந்த இரண்டு கட்சிக்கும் இரண்டு மந்திரி பதவிகள் கொடுக்கப்படுமென்றும் கூறப்படுகிறது. இன்னொரு மந்திரியும் சேர்த்துக்கொள்ளப்பட்டு, புதிய மந்திரி சபையில் 9 மந்திரிகள் இருக்கலாம்.

மந்திரி சபையில் மலையாள பிரதிநிதியாக ஒரு தேசிய முஸ்லீமின் பெயர் பலமாக அடிபடுவதாகத் தெரிகிறது. திரு காமராசர் டில்லியிலிருந்து திரும்பியவுடன்இதுபற்றி நிச்சயமாகும்.

ஆச்சாரியார் மந்திரி சபை 13—4—54 அன்று காலை பதவியிலிருந்து விலகும். அன்று காலை 11 மணிக்கு காமராசர் மந்திரிசபை பதவி ஏற்கும்.

திரு. காமராசர் தமது பார்லிமெண்ட் உறுப்பினர் பதவியை ராஜிஞமா செய்துவிட்டு ஏதாவதொரு அசெம்பிளி ஸ்தானத்திற்கு நிற்பார்.

அசெம்பிளிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு கட்சித் தலைவராகயிருந்து சர்க்காரை நடத்துவதே உசிதம் என்று தோழர் காமராசர் கருதுகிருர்.

புத்தாண்டு பிறப்பன்று பதவியேற்கும் 7 மந்திரிகளைத் தவிர மேலும் ஒன்றிரண்டு மந்திரிகள் பிற்பாடு சேர்த்துக் கொள்ளப்படலாம்.

புது மந்திரி சபையைக் கலந்தாலோசித்து பார்லிமெண்டு காரியதரிசிகள், உதவி மந்திரி நியமனங்கள் அறிவிக்கப்படும்.

## உணவு பொருட்களைப் பாதுகாக்க அணுசக்தி!

அணுசக்திக் கதிர்களால் உணவுப் பொருட்களை எவ்வாறு பாதுகாக்க முடியும் என்று கண்டுபிடிக்க அமெரிக்க அணுசக்திக் கமிஷன் ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தை வகுத்துள்ளது.

மாமிசம், பழங்கள், காய்கறிகள் முதலியவைகளைக் குளிர வைக்காமலே, நீண்ட காலம் வைத்துக்கொள்ள இத்திட்டம் வசதியளிக்குமா என்றுபரிசீலனை செய்யப்படுமென்றும், வெப்ப நிலையிலும் உணவுப் பொருட்களை நீண்ட காலம் கேடு வாமல் பாதுகாக்க இக்கதிர்கள் பயன்படுமென்றும் தெரிகிறது. சமைத்தல், பத்திரமாக மூடி வைத்தல் முதலிய முறைகள் இல்லாமலேயே அணு சக்திக் கதிர்களால் உணவுப் பொருட்களை நீண்டகாலம் வைத்துக் கொள்ள முடியுமாம்!

13—4—54ல்

காரைக்குடியில்

அண்ணு தீட்டிய

## நாடகங்கள்

எஸ். எஸ். ராஜேந்திரன் நாடகக் குழுவினர் நடிப்பர்

## "மலர்ந்த ரோஜா"

★

15—4—54 இரவு 10 மணிக்கு தாத்தையங்கார் பேட்டை சந்தைத் திடலில் அமைத்திருக்கும் லால்குடி நடராசன் அரங்கில் அழகிரி நாடக மன்றத்தார் நடிக்கும், அன்புதாசன் தீட்டிய 'மலர்ந்த ரோஜா" நாடகம் திருச்சி ராபி குழுவினரின் அமைப்புகளுடன் நடைபெறும்.

## கலைக் களஞ்சியம் வெளியீட்டு விழா

★

13—4—54 செவ்வாய் மாலை 6-மணிக்குக் கலைக் களஞ்சியம் முதல் தொகுதி வெளியீட்டு விழா திரு. தி. சு. அவினுசிலிங்கம் செட்டியார் தலைமையில் சென்னைப் பல்கலைக் கழகக் கட்டிடத்தில் நடைபெறும். டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார், திரு. சி சுப்பிரமணியம், பேராசிரியர் ரா. பி சேதுப்பிள்ளை ஆகியோர் விழாவில் கலந்து கொள்வார்கள்.

## நீத்தார் முதலாண்டு நினைவு நாள்

14—4—54 புதன் மாலை 4 மணிக்கு, மாதவரம் வடாரன் கழக உறுப்பினரான தோழர் மா. கோ. அர்ச்சுனன் அவர்கள் சோதரரும், தி. மு. கழக உறுப்பினராயிருந்தவருமான காலஞ்சென்ற கோ. தேசிங் அவர்களது முதலாண்டு நினைவு நாள் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெறும். கோ. தேசிங் படத்தை தோழர் என். வி. நடராசன் திறந்து வைப்பார். தோழர்கள் கே. ஆர். ராமசாமி, ஏ. ஜெயராஜ், எம். ஈ. பாண்டியன், மா.பொ. வேதாசலம், ம. ஏ. நிலவழகன் மற்றும் பலர் பேசுவர்.

## சோழமண்டலத் தலைநகரில்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள்! ஆயிரக்கணக்கானவர் அரை மணியில் உண்டு முடிக்க விருதுநகரிலிருந்து விசேட பணியாளர்!

விசேட அஞ்சல் நிலையம் மருத்துவ நிலையம், தீ அணைக்கும் படை இன்னும் எத்தனையோ-இவையெல்லாம் தஞ்சை மாவட்ட தி.மு. கழக வரவேற்புக் குழுவினரின் அரும்பணியின் அறுவடைகள்!

அவர்கட்கு பொதுச்செயலாளரின் பாராட்டுதல்கள் நிறைய இருந்தன.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா.நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, குறுக்கு நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: இ. க. அண்ணாதுரை, எம். ஏ.